**செய்திவெளியீடு எண்:194** **நாள்:18.03.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குள் அமையும் திட்டமில்லா பகுதிகளில் 1.1.2011–ற்கு முன்னர் கட்டப்பட்டு இயங்கி வரும் அனுமதியற்ற கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கு இத்துறையால் இசைவு வழங்கும் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை எண்.76, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி [நவ(3)]துறை, நாள்: 14.6.2018–ல் வெளியிடப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் நிகழ்நிலை (online)–ல் 14.06.2018 முதல் 13.09.2018 வரை மூன்று மாத காலத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு இசைவு வழங்குவதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி ரிட் மேல்முறையீட்டு மனுக்கள் எண்.233/2019 மற்றும் பலவற்றில் வழங்கப்பட்டுள்ள 10.2.2021 தேதிய தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நீதிமன்ற உத்தரவின்படி இத்திட்டத்தின் கீழ் முன்பே விண்ணப்பித்தவர்கள் உரிய விபரங்களை சமர்ப்பித்து இசைவு பெற சம்பந்தப்பட்ட மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகங்களை அணுகலாம். மேலும், இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கும் விதமாக விண்ணப்பம் சமர்ப்பிக்க இரு வாரங்களுக்கு கால அவகாசம் வழங்கியும் மேற்காண் நீதிமன்ற தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்காண் நீதிமன்ற தீர்ப்பின்படி இரு வார காலத்திற்குள் விண்ணப்பங்களைப் பெறுவதற்கும் மற்றும் இது சம்பந்தமான செய்தி வெளியிடுவதற்கும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் இந்திய தேர்தல் ஆணையத்தால் ஆட்சேபணையின்மை வழங்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் இசைவு பெற விரும்புவோர் 22.3.2021 முதல் 4.4.2021 வரை இருவார காலத்திற்குள் www.tn.gov.in/tcp என்ற இணைய தள முகவரியில் விண்ணப்பம் பதிவு செய்யலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது. இது ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் அரிய வாய்ப்பு என்பதால் இதனை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு
இயக்குநர்
நகர் ஊரமைப்பு துறை,
இ மற்றும் சி மார்க்கெட் சாலை, சிஎம்டிஏ வளாகம்,
3 ஆம் தளம், கோயம்பேடு,
சென்னை – 600 107.

நகர் ஊரமைப்பு இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**